**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 28.05.2021–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி,
நாள் : **27.05.2021**

தனி அலுவலர்,
இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Decanting அமைப்பினை ஏற்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கழிவுநீர் கோட்டம் மூலம் திட்டப் பணியில் இராசிபுரம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Decanting Arrangements அமைப்பினை ஏற்படுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) Decanting Arrangements அமைப்பினை ஏற்படுத்த ஆகும் செலவினத்தை பாதாள சாக்கடைத் திட்ட மதிப்பீட்டிலேயே மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(3814/11/இ2)

**தீர்மானம் எண். 1015**

அனுமதிக்கப்பட்டது.

(2) தேசத்தலைவர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களின் சிலைகளை பாதுகாக்கும் பொருட்டு அரசு அறிவித்ததின் பெயரில் மதிப்பீட்டு விகிதத்தில் இராசிபுரம் நகராட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள மகாத்மா காந்தி சிலைக்கு இரும்பு வேலி அமைத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. பணியின் அவசர அவசியம் கருதி ரூ. 18500/– மதிப்பீட்டில் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரரான திருமதி சாஹிதா ஒப்பந்ததாரரிடம் ஒப்படைப்பு பணியாக வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பணியின் அவசியம் கருதி நகராட்சி வருவாய் நிதியிலிருந்து இப்பணியை மேற்கொள்ளவும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 18500/– மதிப்பீட்டுத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) திருமதி சாஹிதா, நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரருக்கு பணியை ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம்.
இ) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்ற அங்கீகாரம் வழங்கலாம்.

(இ1/008/21)

**தீர்மானம் எண். 1016**

அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் (கோவிட்–19) கொரோனா வைரஸ் நோய் தடுப்புப் பணிகளை மேற்கொள்ளவும் நகர பொது மக்களுக்கு கொரோனா வைரஸ் நோய் பரவாமல்

தடுக்கவும், கொரோனா வைரஸ் நோயால் தொடர்ந்து 3 பேர் பாதிக்கப்பட்ட தெருக்களில் பொது மக்கள் தாண்டி செல்லாத வகையில் மூங்கில் மற்றும் சவுக்கு கட்டைகளைக்கொண்டு கட்டியும், தகர சீட்டுகளைக் கொண்டு அடைத்தும் மக்கள் வெளியே செல்லாத வகையில் நிறையப் பகுதிகளில் தடுப்பு அமைக்கவும் (Containment Zone) அப்பகுதிகளில் சாமியானா துணி பந்தல் போடவும் மற்றும் பேனர்களை அச்சகத்தில் அச்சடித்து கட்டவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினங்களை கோவிட் – 19 SDRF நிதியிலிருந்து Section 15–இல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(868/20/எச்1)**

**தீர்மானம் எண். 1017**

அனுமதிக்கப்பட்டது.

(4) தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 06.04.2021 அன்று நடைபெறுவதால், இந்நகராட்சிப் பகுதிகளிலுள்ள வாக்குச்சாவடி மையங்களுக்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை உடன் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட ரூ. 400000/– மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண். 15–இன்கீழ் மேற்க்கொள்ளவும், பணியினை ஒப்புநோக்கு பட்டியலின் அடிப்படையில் திருமதி ஆர். ஷாகிதா, ஒப்பந்ததாரர் மூலம் மேற்க்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 400000/– மதிப்பீட்டினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) தேர்தல் பணிகளின் அத்தியாவசியத்தினைக் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண். 15–இன்கீழ் திருமதி ஆர். ஷாகிதா, ஒப்பந்ததாரர் மூலம் மேற்க்கொள்ளப்பட்டதை மன்றம் பதிவு செய்யலாம்.

**(இ1/1484/21)**

**தீர்மானம் எண். 1018**

அனுமதிக்கப்பட்டது.

(5) தமிழ்நாடு பொதுத் தேர்தல் 2021 வாக்குப் பதிவு மையங்களில் மாற்றுத் திறனாளிகள் வாக்களிக்க ஏதுவாக, 10 எண்ணிக்கை சக்கர நாற்காலிகள் வாங்க தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண். 15–இன்கீழ் பணியினை உடனடியாக மேற்க்கொள்ள விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விவரங்கள் வருமாறு :

1) Botto, Global Trainers, Madras – ரூ. 6600/– ஒரு எண்ணிக்கை

2) Babu Automobiles & Engineering Works, Paramakudi – ரூ. 6800/– ஒரு எண்ணிக்கை

3) Sri Deepha Enterprises, Paramakudi – ரூ. 6400/– ஒரு எண்ணிக்கை

மேற்க்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள Sri Deepha Enterprises நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று, 10 சக்கர நாற்காலிகள் வாங்கியமைக்கும்,

அதற்கான செலவினம் ரூ. 64000/– மேற்க்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** தேர்தல் பணிக்காக 10 எண்ணிக்கை சக்கர நாற்காலிகள் வாங்க தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண். 15–இன்கீழ் ரூ. 64000/– செலவினம் மேற்க்கொள்ளப்பட்டதை மன்றம் பதிவு செய்யலாம்.

(இ1/1484/21)

**தீர்மானம் எண். 1019**

அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சியில் துாய்மை பணியாளராக 10.01.2019 முதல் பணிபுரிந்து வரும் திரு எம். மணி என்பவர் தனது மனைவி மற்றும் தாயார் கொராவினால் உயிரிழந்து விட்டதால் தனது மகன் மட்டும் தனியாக சொந்த ஊரான திருச்செங்கோட்டில் உள்ளதாலும் தனது குடும்ப சூழ்நிலை காரணமாகவும் திருச்செங்கோடு நகராட்சிக்கு பணி மாறுதல் செய்ய 27.05.2021-ஆம் தேதிய விண்ணபத்தில் கோரியுள்ளார்.மேற்படி துாய்மை பணியாளரை இந்நகராட்சி பணியிலிருந்து திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்த விருப்பத்தின் பேரில் பணிமாறுதல் செல்ல நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** திரு எம்.மணி துாய்மை பணியாளரது மனைவி மற்றும் தாயார் கொரானாவில் உயிரிழந்து விட்டதால் தனது மகனை கவனித்து கொள்ள திருச்செங்கோடு நகராட்சிக்கு பணி மாறுதல் செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பு வைக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(2017/21/எச்1)

**தீர்மானம் எண். 1020**

அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சியில் 10.01.2019 முதல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் திரு ஏ.வாசுதேவன் என்பவர் 15 வருடங்களுக்கு மேலாக தனது மனைவி ரத்த சோகை நோயினால் பாதிக்கப்பட்டு 3 முறை ரத்தம் செலுத்தப்பட்டு தொடர் மருத்துவ சிகிக்சையில் உள்ள்தால் தனது மனைவியின் உடல்நிலை பாதிப்பை கருத்தில் கொண்டும், திருமண வயதில் உள்ள தனது 3 மகள்களின் உயர் கல்வி பயில உதவியாக இருக்கவும், தன்னுடைய குடும்ப சூழ்நிலை காரணமாகவும் திருச்செங்கோடு நகராட்சிக்கு பணி மாறுதல் கோரி தனது 16.04.2021-ஆம் தேதிய விண்ணபத்தில் கோரியுள்ளார். எனவே மேற்படி அன்னார் திருச்சொகோடு நகராட்சிக்கு பணி மாறுதல செய்யும் முன்மொழிவு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** திரு ஏ. வாசுதேவன், துப்புரவு பணியாளர் அவர்களின் குடும்ப சூழ்நிலை காரணமாகவும் திருச்செங்கோடு நகராட்சிக்கு துப்புரவு பணியாளராக பணி மாறுதல் செய்யும் முன்மொழிவு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(2017/21/எச்1)

**தீர்மானம் எண். 1021**

அனுமதிக்கப்பட்டது.

**(8)** இராசிபுரம் நகராட்சியில் துப்புரவு பணியாளராக **10.01.2019** முதல் பணிபுரிந்து வரும் திரு கே.பாண்டியன் என்பவர் தனது மனைவிக்கு உடல் நலம் பாதித்து தொடர் மருத்துவ சிகிச்சையில் உள்ளதாகவும், திடீரென்று தனது காதுகளில் வலி ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்துள்ளதாகவும, அதனால் தினசரி தன்னால் **100** கி.மீ பேருந்தில் பயணம் செய்து பணி செய்ய இயலவில்லை என்றும் மேலும் தனது வயதான பெற்றோர்களை பார்த்துக் கொள்ளவும், தனது இரண்டு குழந்தைகளின் கல்வி தடையில்லாமல் தொடரவும், தனது குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு தன்மீது கருணை கொண்டு திருச்செங்கோடு நகராட்சிக்கு பணி மாறுதல் கோரி **08.04.2021**-ஆம் தேதிய விண்ணப்பத்தில் கோரியுள்ளார். அதன்படி அன்னாரது பணி மாறுதல் முன்மொழிவு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர். சேலம் அவர்களுக்கு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** திரு கே.பாண்டியன் துாய்மைப் பணியாளரின் குடும்ப சூழ்நிலை காரணமாக திருச்செங்கோடு நகராட்சிக்கு பணி மாறுதல் செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(2018/21/எச்1)

**தீர்மானம் எண். 1022**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /— ஆ.குணசீலன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (கூ.பொ),
இராசிபுரம் நகராட்சி.